

விக்கிரவாண்டி சட்டப்பேரவை இடைத்தேர்தல் வருகிற ஜூலை 10 ஆம் தேதி நடைபெற இருக்கிறது, அதனை ஒட்டி காணை வடக்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட கக்கனூர் ஊராட்சி பகுதிகளில் இந்தியா கூட்டணி கட்சிகளின் ஆதரவு பெற்ற நமது கழக வெற்றி வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆதரித்து கள்ளக்குறிச்சி மாவட்ட பொறுப்பு அமைச்சர் எ.வ.வேலு மற்றும் கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்ட கழக செயலாளர் தா.உதயசூரியன் எம்.எல்.ஏ. ஆகியோர் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்களிக்குமாறு கேட்டு பொதுமக்களிடம் தீவிர வாக்குச் சேகரிப்பில் ஈடுபட்டனர்,இதில் கழக நிர்வாகிகள்,இந்தியா கூட்டணி கட்சி நிர்வாகிகள் உள்பட பலபலர் கலந்து கொண்டனர்.



விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் போட்டியிடும் கழக வேட்பாளர் அன்னியூர் சிவாவிற்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்குகள் சேகரிக்க சட்டத்துறை அமைச்சர், புதுக்கோட்டை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.ரகுபதி, சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் வாக்காளர்களிடம் வாக்குச் சேகரித்தனர். நிகழ்வுகளில் புதுக்கோட்டை வடக்கு மாவட்ட துணைச் செயலாளர் க.மதியழகன், புதுக்கோட்டை தெற்கு மாவட்ட துணைச் செயலாளர் ஞான. இளங்கோவன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

## உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களில்

# ‘நான் முதல்வன்’ திட்டம் மூலம் 25,000 பாலிடெக்னிக் மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவில் மகிழ்ச்சி!

**சென்னை, ஜூலை 3 -**

**“நான் முதல்வன்” திட்டத்தின் மூலம் 25,000க்கும் மேற்பட்ட பாலிடெக்னிக் மாணவர்களுக்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களில் வேலைவாய்ப்பு கிடைத்துள்ளது குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில் மகிழ்ச்சியை தெரிவித்துள்ளார்.**

இதுகுறித்து முதல்வரின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

மனதுக்கு இதமான இந்தச் செய்தியைப் பகிர்ந்துகொள்வதில் மிகுந்த மகிழ்ச்சி கொள்கிறேன்.

“நான் முதல்வன்” திட்டத்தின் மூலமாக 25 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பாலிடெக்னிக் மாணவர்கள் வேலைவாய்ப்பு பெற்றிருக்கிறார்கள். இதனைக் கண்டு என் நெஞ்சம் பெருமிதத்தால் நிறைகிறது. நமது திராவிட மாடல் அரசு மெய்யாகவே நமது இளைஞர்களின் கனவுகளை நனவாக்கி வருகிறது.



Over 25,000 polytechnic students get jobs through *Naan Mudhalvan* scheme

Ola Electric is recruiting polytechnic students for electric vehicle plants: T.N. Skill Development Corporation data show that salary packages range from ₹2 lakh per annum to ₹8 lakh per annum

Helping hand

இத்தகைய வாய்ப்புகளை இறுகப் பற்றிக்கொண்டு, தத்தமது துறைகளில் மென்மேலும் புதிய உயரங்களை அடையுங்கள்!

இவ்வாறு முதல்வர் அவர்கள் தமது பதிவில் தெரிவித்துள்ளார்.

## முதல்வர் மு.க.ஸ்டாலினின் கனவுத் திட்டமான

# ‘நான் முதல்வன்’ திட்டத்தின் கீழ் 25,888 பாலிடெக்னிக் மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு!

### ஆண்டுக்கு ரூ.8 லட்சம் வரை சம்பளம்: ‘தி இந்து’ நாளேடு புகழாரம்!

சென்னை, ஜூலை 3 -

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் கனவுத் திட்டமான ‘நான் முதல்வன்’ திட்டத்தின் கீழ் 25,888 பாலிடெக்னிக் மாணவர்களுக்கு ஆண்டுக்கு ரூ.8 லட்சம் வரை சம்பளம் கிடைக்கும் வண்ணம் வேலை கிடைத்துள்ளது.

இதுகுறித்து ‘தி இந்து’ ஆங்கில நாளேட்டில் நேற்று முன்தினம் (1.7.2024) செய்தி வெளியாகி உள்ளது.

“நான் முதல்வன் திட்டத்தின் மூலம் 25,000க்கும் மேற்பட்ட பாலிடெக்னிக் மாணவர்களுக்கு வேலை கிடைக்கிறது என்று ‘தி இந்து’ நாளிதழில் வெளியான செய்திக் கட்டுரையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

ஓலா எலக்ட்ரிக் பாலிடெக்னிக் மாணவர்களை எலக்ட்ரிக் வாகன ஆலைகளில் சேரும் பணியாளர்களுக்கு ஆண்டுக்கு 2 லட்சம் முதல் 8 லட்சம் வரை சம்பளம் வழங்குவதாக தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழக தரவுகள் காட்டுகின்றன என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முழுவதும் உள்ள பாலிடெக்னிக் கல்லூரிகளைச் சேர்ந்த மொத்தம் 25,888 மாணவர்கள், மாநில அரசின் ‘நான் முதல்வன்’ திட்டத்தின் மூலம், ஜூன் 18, 2024 நிலவரப்படி பல்வேறு துறைகளில் வேலை பெற்றுள்ளனர்.

“இந்தத் திட்டத்தின் கீழ், பாலிடெக்னிக் கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு உள்நாட்டு மற்றும் பன்னாட்டு நிறுவனங்களில் லாபகரமான வேலைகளைப் பெறுவதற்கு அரசாங்கம் உதவுகிறது. இதுவரை 252 கல்லூரிகள் வேலை வாய்ப்பு இயக்கத்தில் பங்கேற்றுள்ளன. வேலை வாய்ப்புகள் இன்னும் நடந்து வருவதாகவும், சுமார் 58,000 மாணவர்கள் தங்கள் படிப்பின் இறுதி ஆண்டில் படித்து வருவதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த ஆண்டு, ஓலா எலக்ட்ரிக் தனது எலக்ட்ரிக் வாகன (EV) ஆலைகளுக்கு பாலிடெக்னிக் மாணவர்களைச் சேர்க்கிறது. தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் (TNSDC) படி, நிறுவனங்கள் அதன் ஆலைகளுக்கு புதிய விண்ணப்ப தாரர்களை நியமிக்க திட்டமிட்டுள்ளது. தற்போது, தொகுக்கப்பட்ட வளாக வேலை வாய்ப்பு ஏற்பாடுகள் நடந்து வருகின்றன, தற்போது,



120க்கும் மேற்பட்ட விண்ணப்பதாரர்கள், அசெம்பிளி லைன்கள், லாஜிஸ்டிக்ஸ், ஆபரேஷன்ஸ் மற்றும் ஸ்டோர்ஸ் போன்றவற்றில், நுழைவு நிலை நிலைகளில் பணியமர்த்தப்படுவதற்குத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளனர்.

அசன்ட்சர், அமேசான், அசோக் லேலண்டு, கேட்டர் பில்லர் இந்தியா, டைகின், டெல் ஃபி, டி.வி.எஸ். பி.ஓ. எய்.சி.எச்., எய்ச்சர், போர்டு, எச்.சி.எல்., டெக் மற்றும் எல் அண்டு ட்டி உள்ளிட்ட நிறுவனங்களும் பாலிடெக்னிக் மாணவர்களை வேலைக்கு அமர்த்தியுள்ளன. சில வெளிநாட்டு வேலைவாய்ப்புகளும் பதிவு செய்யப்பட்டன.

இந்த மாணவர்களுக்கான சம்பளப் பேக்கேஜ்கள் வருடத்திற்கு 2 லட்சம் முதல் 8 லட்சம் வரை, நோக்கியா வழங்குகிறது.

ஜே.இன்னசென்ட் திவ்யா, (மேலாண் இயக்குநர்) இதுபற்றி கூறியதாவது:-

தொழிற்சாலைகள், கடை நிலை நிபுணத்துவம் கொண்ட பாலிடெக்னிக் கல்லூரிகளில் படிக்கும் மாணவர்களை விரும்புகின்றன.

“இந்த ஆண்டு, பொறியியல் கல்லூரிகளில் எங்கள் பணியமர்த்தலைக் குறைத்து, அதிக பாலிடெக்னிக் மாணவர்களை தேர்வு செய்தோம். இந்த மாணவர்கள் அதிக நடைமுறை அமர்வுகளுக்கு உட்படுத்தப்படுகிறார்கள், மேலும் முதல் நாளிலிருந்தே வேலை தளத்தில் நிறுத்தப்பட லாம். இது பயிற்சி செலவைக் குறைக்க உதவுகிறது...” என்று குறிப்பிட்டார். இதில் பங்கேற்ற நிறுவனங்களில் ஒன்று, கூறியது:

இந்தத் திட்டத்தின் கீழ், பாலிடெக்னிக் கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு டிஜிட்டல் திறன்கள் (மெய்நிகர்), கட்டிடத் தகவல் மாடலிங், AR மற்றும் VR ஐப் பயன்படுத்தி தொழில்துறை மெட்டாவேர்ஸ், இண்டஸ்ட்ரி 4.0 மற்றும் பிரிண்டட் சர்க்யூட் போர்டு (பிசிபி) வடிவமைப்பு போன்றவற்றில் பயிற்சி அளிக்கப்படுகிறது. தொழிற்பயிற்சி நிலையங்கள் மூலம் கல்வி கற்கும் மாணவர்களுக்கும் பயிற்சி அளிக்கப் படுகிறது.

இவ்வாறு ‘தி இந்து’ நாளிதழில் செய்திக் கட்டுரை வெளியாகி உள்ளது.

